**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 அவினாசி–** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) நான் 7ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அழைத்ததன் பேரில் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விலாசத்தில் தான் குடியிருக்கிறேன் என்று காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடபுறம் ஒரு சொத்து தள்ளி எனக்கு நிலம் இருப்பதைக் காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எத்தனை நபர்கள் வாதி, எத்தனை நபர்கள் பிரதிவாதிகள் என தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் வாதி, பிரதிவாதிகளை தெரியும் என பிரதிவாதிகள் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

2) மும்மூர்த்தி ராஜா எனது உறவினரா என்றால் இல்லை, ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள். தாவா சொத்து ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றும், தற்போது வருவாய்துறையில் யார் பெயரில் உள்ளது என ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. எனது சாட்சிய வாக்குமூலத்தை மும்மூர்த்தி ராஜா சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். தாவா சொத்தின் பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண் தெரியும். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் சுமார் 6ஏக்கர் 75 செண்ட் ஆகும். அப்துல் அஜீஸ் தகப்பனாரை தெரியுமா என்றால் தெரியும். அவரது தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் எரப்பராவுத்தர் என கூறுவார்கள். அவர் எப்போது இறந்தார் என்றால்

1992ம் வருடமாக இருக்கலாம். தாவா சொத்து சம்பந்தமாக தரப்பினர்களிடையே எத்தனை வருடங்களாக வழக்கு நடைபெறுகிறது என்றால், சுமார் 20 வருடங்களாக நடைபெறுகிறது.

3) வாதி இவ்வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுளளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் பிரதிவாதிகளால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்தை பற்றியோ, வாதிகளின் வழக்கு சொத்தில் உள்ள அனுபவம் பற்றியோ தெரியாது என்றால் சரியல்ல. எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் உண்மையாக இருந்திருந்தால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவை அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**